# அறிவித்தல்

2023 நவம்பர் 13 ஆம் திகதி திங்கட்கிழமை கௌரவ நிதி,பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட உரை நிகழ்த்தப்பட உள்ளதன் நிமித்தம் பின்வரும் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகளை முன்னைய வருடங்களில் மேற்கொள்ளப்பட்டவாறு நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் இத்தால் அறியத்தர விரும்புகின்றேன்.

- **2023 நவம்பர் 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கான பாதுகாப்பு ஏற்பாடுகளை கீழே குறிப்பிடப்பட்டவாறு மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.**

  பாராளுமன்ற உறுப்பினர்களின் ஓய்வு அறைகள், உடை அலுமாரிகள் உட்பட ஒட்டுமொத்த பாராளுமன்றக் கட்டிடமும் இத்தினம் பாதுகாப்புச் சோதனைக்கு உட்படுத்தப்படும்.

- **2023 நவம்பர் 13 ஆம் திகதி திங்கட்கிழமைக்கான பாதுகாப்பு ஏற்பாடுகளை கீழே குறிப்பிடப்பட்டவாறு மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.**

  (அ) பொதுமக்கள் கலரி விசேட வகுதியினர்களுக்கு மாத்திரம் திறந்திருக்கும். சபாநாயகர் கலரி தூதுவர்களுக்காக மட்டும் ஒதுக்கப்படும். .

  (ஆ) இன்றைய தினம் பாராளுமன்ற வாகனத் தரிப்பிடம் மூடப்படுவதனால் உறுப்பினர்கள் வருகை தருகின்ற வாகனங்கள் உரிய வாகனத் தரிப்பிடங்களுக்கு அனுப்பப்படும்.

  (இ) இத்தினத்தில் பாராளுமன்றத்திற்கு வருகை தரும்போது சாரதி ஒருவரை அழைத்து வருவதற்கு இயன்றளவு நடவடிக்கை எடுக்குமாறு கௌரவ உறுப்பினர்களை அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

  (ஈ) கௌரவ உறுப்பினர்களே வாகனத்தை ஓட்டி வருகின்ற சந்தர்ப்பத்தில் அவர்களின் வாகனங்களை உரிய வாகனத் தரிப்பிடத்தில் நிறுத்தி வைப்பதற்காக உறுப்பினர் நுழைவாயில், பணியாளர் நுழைவாயில் மற்றும் பொதுமக்கள் நுழைவாயிலில் பாராளுமன்ற பணியாட்டொகுதியைச் சேர்ந்த சாரதிகள் சேவையில் ஈடுபடுத்தப்படுவார்கள் என்பதையும் அறியத்தர விரும்புகின்றேன்.

  (உ) இத்தினத்தன்று போக்குவரத்துப் பொலிஸார் மற்றும் அண்மைய பொலிஸ் மூலம்விசேட போக்குவரத்துத் திட்டமொன்றினை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**மேற்படி விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பில் அனைத்துப் பாராளுமன்ற உறுப்பினர்களினதும் ஒத்துழைப்பினை எதிர்பார்ப்பதாக அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.**